தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 11.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.CP 3111/F/2024

திரு.சா.காஜாமைதீன் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(மதுரை) லிமிட்., .. பொது அதிகார அமைப்பு
பைபாஸ் ரோடு, மதுரை-625010.

ஆணை-II

இவ்வழக்கின் மீதான விசாரணை 07.10.2026 அன்று, நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவினைத் தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திரு.N.மாரிமுத்து, உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) லிட்., விருதுநகர் மண்டலம், அவர்கள் 11.11.2026 இன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி மனுதாரருக்கு கடித எண்.விருது/பொதஅ/CP-3111-F-2024/2026. நாள் 09.11.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கியுள்ளதாகவும் மேலும் மனுதாரர் கோரும் ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதற்கான பிரமாண வாக்குப்பத்திரம் ஒன்றையும் மனுதாரருக்கு அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான அஞ்சலக கண்காணிப்பு அறிக்கை நகலையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.ஆண்டவர் (மவமே), துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிட்., விருதுநகர் மண்டலம் அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தற்போதைய பொதுத்தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் ஏற்கிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு. ஆண்டவர், துணை மேலாளர் அவர்கள் 01.10.2023 முதல் 20.06.2024 வரை பணியாற்றியிருப்பதால் அவரது விளக்கம் ஏற்புடையது அல்ல எனக்கருதி மனுதாரரின் 6(1) மனுவானது

15.02.2023 நாளிடப்பட்டு இருப்பதால் அன்றைய தேதிய அப்போதைய பொதுத்தகவல் அலுவலருக்கு கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

"மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவிற்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத 15.02.2023 நாளைய அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிட்., விருதுநகர் மண்டலம் அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை 02.12.2026 அன்று அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது."

ஓம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்
(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். CP 3111/F/2024
பெறுநர்
பொது அதிகார அமைப்பு:-
பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(மதுரை) லிமிட்.,
பைபாஸ் ரோடு, மதுரை-625010.

அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(மதுரை) லிமிட்.,
பைபாஸ் ரோடு, மதுரை-625010.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

புகார்தாரர்:-

திரு.சா.காஜாமைதீன்,
9/605B3A6, திருப்பதி நகர்,
ரிசர்வ்லயன், சிவகாசி (மேற்கு),
விருதுநகர் மாவட்டம்-626124.

Copy to file: KR/PA